புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
ज्ञान - विज्ञानं विमुक्तये
UGC Approved Journals
ISSN: 2456-821X
Vol:07, Issue: 02 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது மே 2023 - வெளியிடப்பட்டது ஜுன் 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS
June-2023

# வெண்முரசு வரிசை புதினங்களில் பாரசுராமன் தொன்மமும் பார்ப்பனிய நோக்கமும்

முனைவர் ரா.நாகஜோதி
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
ஆத்தூர் கூட்டுறவு கலை மற்றும் அறிவியல் கல்லூரி
சீவல் சரகு, திண்டுக்கல்

ஆய்வுச் சுருக்கம்

தொன்மங்கள் கடந்த காலத்தை நிகழ்காலத் தலைமுறைகளுக்குக் கொண்டு செல்லும் ஊடகமாகத் திகழ்கின்றன. அந்தவகையில் ஜெயமோகன் வெண்முரசு வரிசையில் எழுதி வரும் புதினங்கள் மகாபாரதத்தை மறுகட்டமைப்புச் செய்கின்றன. இம்மகாபாரத தொன்மக்கதை மாந்தர்கள் அதே புனிதத்தன்மையுடன் படைக்கப்பட்டுள்ளனர். இவர்களின் செயல்கள் கேள்விகளுக்கு உட்படுத்தாமல் நியாயப்படுத்தப்படுகின்றன. அந்தவகையில் ஜெயமோகன் படைத்துள்ள பரசுராமன் தொன்மம் சத்திரியர்களை அழித்து பிராமணிய ஆற்றலை நிலைநிறுத்த மேற்கொண்ட செயலும் தந்தையின் செல்லுக்குக் கட்டுப்பட்டு தாய்க்கொலை புரிந்த செயலும் நிலம் பார்ப்பனர்களுக்குச் சொந்தமானது. பெண் ஆணின் கட்டளைக்குக் அடிபணியும் இரண்டாம் தரமானவள் என்னும் பார்ப்பனிய நோக்கத்தை இக்கட்டுரை வெளிப்படுத்தியுள்ளது.

## முன்னுரை

இந்திய இலக்கியங்களில் இதிகாசங்களுக்கு மக்கள் மத்தியில் அதிக முக்கியத்துவம் உண்டு. இவை பாமரர்கள், படித்தவர்கள் என்று அனைத்துத் தரப்பினரிடமும் செல்வாக்குப் பெற்றுத்திகழ்கின்றன. இதிகாசக்கதைகள் வாழ்ந்ததாக நம்பப்படும் மண்ணின் மைந்தர்களின் கதைகள். தொடக்கத்தில் போர்க்களத்தில் சூதர்களால் பாடப்பட்ட இக்கதைகள் சாமானிய மக்களின் வாய்மொழி வழக்காக இருந்தன. பின்னர் ஆரியரால் தொகுக்கப்பட்டு அவற்றுக்குப் புனிதத்தன்மை வாங்கப்பட்டது. அதன்விளைவு அவற்றின் பாதுகாப்பிலும் சேர்க்கையிலும் பங்கு கொண்ட ஒருசாரார் தம்மையும் புனிதமானவர்களாகக் கட்டமைத்துக்கொண்டனர். அவர்கள் எல்லாவற்றையும் தமக்குச் சாதகமாக மாற்றிக்கொள்ள இந்த இதிகாசக் கதைமாந்தர்களைப் பயன்படுத்திக்கொண்டனர். இவ்விதிகாசக் கதைமாந்தர்கள் காலம் கடந்தும் பயணிக்கின்றனர். அதனால் அவர்களின் இருப்பு, சமகாலம்வரை இந்திய சமூகத்தில் வாழ்வியல் தாக்கத்தை ஏற்படுத்திவருகின்றது. இவ்வாறு தாக்கத்தை ஏற்படுத்துவதில் மகாபாரதக் கதைமாந்தர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். இக்கதைமாந்தர்களைக் கொண்டு படைப்பாளர்கள் வரலாற்றைத் திரிக்கவும், உருவாக்கவும், புனையவும் முயற்சிசெய்கின்றனர். மேலும் கடவுள், உலகம், வருணங்களின் தோற்றம் முதலியவற்றை உருவாக்கவும் இக்கதைமாந்தர்கள் உதவுகின்றனர். இந்நிலையில் இவர்கள் ஒரு குறிப்பிட்ட சமூகத்தின் உயர்வு, தாழ்வுப் பண்பாட்டைக் கட்டமைப்பவர்களாகவும் மாற்றம் பெற்றனர். இக்கதைமாந்தர்களைக் கொண்டு உருவாக்கப்பட்டத் தொன்மக்கதைகள் சமூகத்தில் அறத்தை நிலை நாட்டுவதாக நம்பவைக்கப்படுகின்றன. அந்த வகையில் பரசுராமன் தொன்மத்தைக்கொண்டு ஜெயமோகன் கட்டமைத்துள்ள பார்ப்பனிய நோக்கத்தை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

*ஆய்வு நெறிமுறைகள்*

*ஜெயமோகன் மகாபாரதத்தை மையமிட்டு எழுதியுள்ள வெண்முரசு வகை புதினங்கள் வைதீகக் காலாச்சாரத்தை அடிப்படையாகக் கொண்டு புனையப்பட்டுள்ளதால் தொன்மம், புனிதம் என்ற தார்மீகக் கோட்பாடுகள் பின்பற்றப்படுகின்றன. இவை பெண்ணடிமைத்தனத்திற்கும் வருண அமைப்பிற்கும் முக்கியத்துவம் தருகின்றன. ஆகையால் இக்கட்டுரையில் சமூகவியல் அணுகுமுறையும்பெண்ணிய அணுகுமுறையும் பயன்படுத்தப்பட்டுள்ளன.*

*பரசுராமன் தொன்மம்வழி ஜெயமோகனின் கட்டமைப்பு*

*பரசுராமன் சத்திரியர்களை அழித்த செய்தி மழைப்பாடல் நாவலில் பதிவு செய்யப்பட்டுள்ளது. பரசுராமனின் பிறப்பு விஷ்ணுவுடன் இணைக்கப்பட்டது. காரணம் திருமால் வருணாசிமத்தைக் காப்பவர் (கீதை). பரசுராமன் பார்ப்பன எதிரிகளை அழித்து பிராமணியத்தைக் காப்பவர். மேலும் அக்கதை கிருத யுகத்தில் முடிவாகச் சித்திரிக்கப்பட்டுள்ளது. இதனை “அன்றொரு காலத்தில் ஆடலின் வேகத்தில் கிருதம் என்னும் பகடை தெறித்தோடியது ஒளிரும் ஒரு சிவந்த விண்மீனாக அது பெருவெளியில் பாய்ந்து விண்ணகப் பாற்கடலில் விழுந்தது. அதன் அலைகள் எழுந்து அவ்வெண்ணிறப்பரப்பில் கால அகால விகாலமென சுருண்டிருந்த ஆதிசேடனை அறைந்தன. அவன் அசைவில் அறிதுயில் கொண்டிருந்த விஷ்ணு கண்விழித்தெழுந்தார். அவரது சினம் ததும்பிய கணம் பூமி எனும் தாயக்களத்தில் ஒரு மனிதனாகப் பிறந்தது. அவன் பெயர் பரசுராமன்””1 எனும் ஜெயமோகன் கூற்றிலிருந்து விஷ்ணுவின் கோபம்தான் பரசுராமன் என்பதை அறியலாம். மேலும், “தசரத ராமன் என்ற சத்ரியன் சிவதனுஸை ஒடித்த செய்தியைக் கேட்டதும் பரசுராமர் கடும் கோபம் கொண்டார். பிராமண வீரியத்தை நிலைநாட்டுவதற்கு உறுதிகொண்டார். தன் விஷ்ணுதனுஸை எடுத்துக்கொண்டு வேகமாக நடந்து ராமனைப் பார்க்கவந்தார்”.”2 என்கிறார். இங்கு பரசுராமன், இராமன் இருவருக்குமான போர் சத்திரியர், பிராமணர் இருவருக்குமான போராக உள்ளது. ஜனகன் வைத்திருந்த வில் சத்திரிய ஆற்றலைக் குறிப்பதாகவும் பரசுராமன் வைத்திருந்த வில் பிராமண ஆற்றலைக் குறிப்பதாகவும் உள்ளது. இங்குப் பரசுராமன் தன் பிராமண ஆற்றலை நிலை நாட்டவே இராமனைப் போருக்கு அழைக்கிறார். கம்ப இராமாயணத்தில் இராமன் பிராமண ஆற்றல் பொருந்திய விஷ்ணு தனுசை வளைத்து விடுகிறார்.*

*கம்பராமாயணத்தில் இராமன் விஷ்ணு தனுசை வளைத்து, பிராமாண ஆற்றலைத் தோற்கடிக்கச் செய்கிறார். ஆனால் பிராமணரைக் கொல்வது குற்றமாகக் கருதி பரசுராமனைக் கொல்லாமல் அவன் தவ ஆற்றலை இழக்கச் செய்கிறான் இதனைக் கம்பர்,*

*எய்த அம்பு இடைபழுது எய்திடாமல் என்*
*செய் தவம் யாவையும் சிதைக்கவே! என*
*கை அவண் நெகிழ்தலும் கணையும் சென்று அவன்*
*மைஅறு தவம் எலாம் வாரி மீண்டதே*

*(கம்பர், இராமாயணம், பாடல்:1301)” 3*

*என்று கூறுகிறார். கம்பரின் இக்கூற்று விஷ்ணு தனுசை இராமன் வளைத்ததன் பின்னணியில் பிராமணர் தோற்க அனுமதிக்கப்பட்டதைக் காட்டுகிறது. ஆனால் அவரைக் கொல்லவில்லை காரணம் பிராமணச் சட்டம் அதற்கு அனுமதிக்கவில்லை. ஆகையால் கம்பர் இராமனைக் கொண்டு பரசுராமன் தவ வலிமையை இழக்கச் செய்து சத்திய ஆற்றலை நிலைநாட்டுகிறார். ஆனால் ஜெயமோகன் “நீ சிவதனுஸை ஒடித்தாய் என்று அறிந்தேன். என்னுடன் இக்கணமே போருக்கு வா என்றார். நான் எதிரிகளுடனேயே போரிடுவேன். தாங்கள் என் குருநாதர். பிராமணர். தங்களுக்கெதிராக என் வில் நாணேறாது என்றான் ராமன்”.”4 என்கிறார். இக்கூற்று பிராமணருடன் போர் செய்வதையே குற்றமாகக் கருதும் ஜெயமோகனின் பிராமண சார்புநிலையைக் காட்டுகிறது. மேலும், ஜெயமோகன் “முற்காலத்தில் விஸ்வகர்மாவான மயன் பராசக்தியின் புருவத்தைப் பார்த்து அதே அழகுள்ள இரண்டு மாபெரும் விற்களைச் செய்தான். ஒன்றை சிவனுக்கும் இன்னொன்றை விஷ்ணுவுக்கும் அளித்தான். சிவதனுஸ் இறுதியாக மிதிலையை ஆண்ட ஜனகரிடம் வந்துசேர்ந்தது. விஷ்ணுதனுஸ் பரசுராமரின் கையில் இருந்தது. சிவதனுஸ் சத்ரிய ஆற்றலாகவும் விஷ்ணுதனுஸ் நூற்றெட்டு சத்ரிகுலங்ளை அழித்த பிராமண ஆற்றலாகவும் இருந்தது”.”5 இக்கூற்றில் சிவதனுஸ், விஷ்ணுதனுஸ் இரண்டும் சத்திரிய ஆற்றல்,*

*பிராமண ஆற்றலைக் காட்டுகின்றன. இறுதியில் சிவதனுஸ் ஒடிக்கப்பட்டு விஷ்ணுதனுஸ் நிலைபெற்றதில் சத்திரிய ஆற்றல் முடக்கப்பட்டு பிராமண ஆற்றல் நிலைநாட்டப்பட்டதில் படைப்பாளரின் பிராமணப்பற்று வெளிப்படுகிறது.*

மேலும், *“அளவுமீறும் அமுதம் நஞ்சானதுபோல அறம் காக்கும் சத்ரியவீரமே மறமாக ஆன காலம் அது”.”6 எனும் ஜெயமோகன் கூற்றும் முக்கியத்துவம் வாய்ந்தது. இக்கூற்று கிருத யுகத்தின் முடிவையும் திரேதா யுகத்தின் தொடக்கத்தையும் சுட்டிக் காட்டுகிறது. அதாவது கடவுளர்கள் ஆட்சி புரிந்த நிலை மாறியதைக் காட்டுகிறது. “நாங்களெல்லாம் அழியாத கண்ணீர்த்துளிகள். மண்ணில் சத்ரியர்களின் அநீதியால் வதைக்கப்பட்டவர்களால் உதிர்க்கப்பட்டவர்கள். அவர்களின் அகம் அணையாமல் எங்களுக்கு மீட்பில்லை””7 எனும் ஜெயமோகனின் கூற்று கண்ணீர்த்துளிகளின் எதிரிகளாகச் சத்திரியர்களை அடையாளப்படுத்துகிறது. இக்கண்ணீர்துளிகள் யாருடையது என்பதை அறியவேண்டியது அவசியமாகிறது.*

*“அறத்தைக் காக்கும் சத்ரியன் என எவரும் இல்லையா? என்றான் பரசுராமன். உத்தமரே, காக்கும் மன்னர்களெல்லாம் அழிந்துவிட்டனர். மன்னனின் மீட்பென்பது அறத்தால். அறம் திகழவே மக்கள். மக்கள் வாழவே மண். மண் காக்கவே அரசு. அரசை முதன்மையாகக் கொள்ளும் சத்ரியன் அறத்தை இழக்கிறான். அறம் மறந்த மன்னனின் அருகமரும் மன்னரும் அறத்தை இழக்கிறான். சத்ரியகுலமே பாற்கடல் திரிந்ததுபோல் ஆயிற்று””8 எனும் ஜெயமோகனின் கண்ணீர்த்துளிகளின் கூற்று சத்திரியர்களின் வீழ்ச்சியை விரும்புவதாகக் காட்டுகிறது. கண்ணீர்த்துளிகளின் பின்னணியில் யார் உள்ளனர் என்பதை அறிய வேண்டிய தேவை முன்வந்துநிற்கிறது. இதன்வழி “பாரதவர்சம் வாழவேண்டுமென எண்ணிய ரிகளால் சத்ரியகுலம் உருவாக்கப்பட்டது””9 எனும் கூற்றில் ரிஷிளைப் பிராமணர்களாகவே கருத இடம் தருகிறது. சத்ரியர்கள் கருக்குழவியை மூடியிருக்கும் கருவறை போன்றவர்கள் ஊட்டி வளர்ந்து பாதுகாப்பவர்கள். ஆனால் கருமுதிர்ந்ததும் அதைப்பிளந்து கொண்டுதான் குழந்தை வெளிவர முடியும்””10 “பரசுராமர் சத்ரியகுலத்தை அழித்தது. காட்டைமூடி ஓங்கி நின்றிருக்கும் முதுமரங்களைக் காட்டுத்தீ அழிப்பதற்கு நிகரானதுதான். அம்மரங்களின் நிழலில் குறுகி உயிரற்றிருக்கும் பல்லாயிரம் சிறிய மரங்கள் புதுவேகம் கொண்டு வான்நோக்கி எழும்””11 எனும் ஜெயமோகனின் கூற்றிலிருந்து முதுமரங்களுடன் ஒப்பிடப்படுவது சத்திரியர்கள். பரசுராமன் அவர்களை அழித்த செயலானது பிராமணியத்தை நிலைநாட்டும் செயலாகும். இதற்கு வலுசேர்க்கும் வண்ணம் ஞா.ஸ்டீபன் கருத்து அமைகிறது அவர் பரசுராமன் கதையை மலையாளக் கலாச்சாரப் பின்னணியில் “பரசுராமன் விஷ்ணுவின் அவதாரம் என்றும் அவன் கேரளப் பகுதியை உருவாக்கிய பின் அதனை ஆளும் பொறுப்பினை நம்பூதிரிகள் எனப்படும் பிராமணர்கள் கையில் கொடுத்ததாகவும் நாகமையா குறிப்பிடும் கதை கூறுகின்றது. ஆரியர்கள் தென் இந்தியாவில் பிற்காலத்தில் வந்து குடியேறியவர்கள். இவ்வாறு வந்து குடியேறிய பிராமணர்கள் தங்களை உயர்ந்தவர்களாக எடுத்துக்காட்டுவதற்காக இக்கதையைப் புனைந்திருக்கலாம். பிராமணர்கள் தென் இந்தியாவில் நுழையும்போது பல தாழ்த்தப்பட்ட சாதியினர் ஆங்காங்கே ஆட்சிப் பொறுப்பிலிருந்தனர். இதனால் பிராமணர்களுக்கும் சத்திரிய அந்தஸ்தில்லாத அரசர்களுக்குமிடையிலான முரண்பாடு தவிர்க்க முடியாததாயிற்று. வேத நூல் கொள்கைகளை நியாயப்படுத்திக் கொள்வதற்காக இவர்களுக்குப் பிராமணர்கள் சத்திரிய அந்தஸ்து அளித்தாலும் சத்திரியர்கள் பிராமணர்களோடு அடையாள பூர்வமான புனைகதை பரசுராமன் கதையாகும் என ரொமிலா தாப்பர் (1972:179) குறிப்பிடுகிறார். இக்கதை பிராமணர்களை இம்மண்ணின் சொந்தக்காரரர்களாக மாற்றிவிடுகிறது. ஆளும் உரிமையைக் கொடுக்கின்றது. தீமை இழைத்த அரசனைப் (சத்திரியன்) பழிவாங்குவதோடு விட்டுவிடாமல் அதனை நியாயப்படுத்தும் வண்ணம் ஒரு நிலப்பரப்பினையும் புதிதாக உருவாக்கிக் காட்டுகிறது. கதை வெளிப்படையாக நிலப்பகுதி தோன்றிய வரலாற்றைக் குறிப்பிடுவதாய் அமைந்தாலும் பிராமணர்களுக்கும் சத்திரியர்களுக்கும் இடையிலான முரண்பாடே தலைதூக்கி நிற்கின்றது”.12 என்ற கூற்றோடு ஜெயமோகன் கதையை இணைத்துப் பார்த்தால் அந்தக் கருக்குழவி பிராமணர்கள் என்பது தெளிவாகிறது. அந்தத் கண்ணீர்த்துளிகள் பார்ப்பனர்களின் முன்னோர்களின் கண்ணீர்த்துளிகளாக அமைந்திருப்பதை அறியமுடிகிறது. ஜெயமோகன் இக்கதையைப் பார்ப்பன நலனை முன்னிறுத்திய கதையாகப் படைத்திருப்பது வெளிப்படையாகத் தெரிகிறது. இதனை உறுதி செய்ய “உத்தமரே, அதர்வ நெறிப்படி இங்கு*

நிகழும் இவ்வேள்வியின் முடிவில் அவர்கள் பிருகு குலத்துக்குள் எடுத்துக்கொள்ளப்படுவார்கள். ஹிரண்யகர்ப்பம் என்னும் இச்சடங்கில் அவர்களின் உடலில் இருந்து பதினெட்டு குருதிச்சொட்டுகள் வேள்விநெருப்பில் விடப்பட்டு அவர்களுடைய இறப்பு நிகழ்த்தப்படும் அதன்பின் மகாகுருநாதரின் பதினெட்டு தளி குருதியால் பஞ்சாப்சரஸ் என்னும் தடாகம் பசுவின் கருவறையாக ஆக்கப்படும். அதில் மூழ்கி அவர்கள் மறுபிறப்பெடுத்து வரும்போது அவர்களுக்கு வேள்வியன்னம் பகிர்ந்தளிக்கப்படும். அதே விகிதத்தில் அவர்களின் நிலங்கள் அவர்களுக்கே அளிக்கப்படும். அதை எதிர்க்கும் சத்ரியர்கள்மீது பிருகுகுலத்தவர் அனைவரும் இணைந்து போர்தொடுக்க வேண்டும் என்பது பரசுராமரின் கட்டளை. பாரதவர்சத்தையே பிருகுகுலம் ஆளவேண்டும்மென்பது பார்க்கவராமரின் ஆணை. அதை நிகழ்த்துவதே எங்கள் குருகுலத்தின் கடமை என்றான் புவனன்".''13 என்னும் ஜெயமோகன் கூற்று நிலத்தை, பிருகுகுலத்திற்குச் சொந்தமாக்கியதைக் கூறுகிறது. பிருகுகுலம் பிராமணர் குலம் என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும் பரசுராமனின் மற்றொரு செயலான தாய்க்கொலை புரிந்த செயலும் குறிப்பிடத்தக்கது. இத்தொன்மம் ஒருகணவர் முறையுடன் கற்புக் கோட்பாடும் இணைந்து பரசுராமனைத் தாய்க்கொலை புரியத் தூண்டியுள்ளதை விளக்குகிறது. இவ்விடத்தில் "பூசைக்கு வந்த ஜமதக்னி முனிவர் எங்கே என் வழிபாட்டு நீர்? என்று கேட்டார். கைகூப்பி தேவி கண்ணீருடன் அமைதி காத்தாள். தன் தவ வல்லமையால் விண்ணில் பறந்த அந்த கந்தர்வனை முனிவர் தன் அகக்கண்ணில் கண்டார். சினம் கொண்டு எரிந்தபடி ஐந்து மைந்தரையும் அழைத்து நெறி பிறழ்ந்த இவள் அழிக! இக்கணமே இவள் கழுத்தை வெட்டுக!""14 என்றார் எனும் ஜெயமோகனின் கூற்றின்வழி ரேணுகைத்தொன்மம் கற்புக் கோட்பாட்டுடன் இணைந்ததை அறியலாம். "ரேணுகையின் ஐந்தாவது மகன் முன்னால் வந்து உடைவாளை உருவினான்............. அவன் வாளை ஓங்கி அவள் கழுத்தை வெட்டி வீழ்த்தினான்""15 இதன்வழி பரசுராமன் தாய்க்கொலை செய்ததை அறியலாம். தாயின் கழுத்து வெட்டப்பட்டதுடன் இக்கதையை முடித்துள்ளார் ஜெயமோகன்.

பரசுராமன் சத்திரியர்களை அழித்த செயலையும் தாய்க்கொலை புரிந்த செயலையும் நோக்கும்போது ஆண் படைப்பவனாக இருந்ததைக் காட்டுகிறது. இதனை, ஸ்டீபன் "ஆண் படைப்பவனாகவும் அல்லது வரலாற்றுக்குக் காரணமானவனாகவும் சித்திரிக்கப்படுகின்றான். ஆளும் அதிகாரம் (நிலத்தையும் பெண்ணையும்) ஆணுக்குரியது என்பதை இக்கதைகள் தெளிவுபடுத்துகின்றன. படைப்பவன் ஆணாக இருப்பது இந்திய மரபில் காணப்படும் பெரும்பான்மைப் புராணங்களின் பொது இயல்பு என்பது கவனிக்கத்தக்கது. பிரம்மா, விஷ்ணு, சிவன் போன்ற முழு முதற்கடவுளர் படைக்கும் ஆற்றலுடையவர் என்பதைப் பலபுராணங்களின் வழி அறியலாம்".''16 அவ்வாறே திருமாலுடன் ஒப்பிடப்பட்ட பரசுராமனும் படைப்பவனாக (நிலத்தையும் பெண்ணையும்) இருந்தான். இக்கட்டுரையில் தாய்க்கொலை புரிந்த பரசுராமன் செயலானது பெண்ணிய அணுகுமுறை கொண்டும் நிலத்தைப் பார்ப்பனர்களுக்குச் சொந்தமாக்கிய செயலானது சமூகவியல் அணுகுமுறை கொண்டும் ஆராயப்பட்டுள்ளது.

முடிவுகள்

- தொன்மக் கதை மாந்தர்கள் புனிதத்தன்மையுடனே சமூகத்தில் நம்ப வைக்கப்படுகின்றனர். இதனால் இவர்களும் இவர்களை உருவாக்கியவர்களும் புனிதமானவர்களாகின்றனர்.
- வருணாசிரம சட்டம் பார்ப்பனர்களுக்குத் தனித்த செல்வாக்கு வழங்கியது. அத்தன்மை சிறிதும் குறையாமல் வெண்முரசு வரிசை நாவல்கள் படைக்கப்பட்டுள்ளது.
- பெண்ணுக்கான கற்புக் கோட்பாட்டை வரையறுக்கவும் பெண் கணவனுக்கானவள் என்பதைக் காட்டவும் அவளை விசாரணையின்றி தண்டிக்கவும் அவனுக்கு உரிமையை வழங்கவும் ஆண் மையச் சமூகம் தொன்மக்கதைகளைப் பயன்படுத்தியது. இதனால் தாய்வழிச் சமூகம் வீழ்ச்சியைச் சந்தித்து, பெண் இரண்டாம் நிலைக்குச் செல்ல வழிவகுத்தது.
- இராமனின் நோக்கமும் பரசுராமனின் நோக்கமும் ஒன்றாய் இருப்பதைக் காட்டுகிறது. இருவரும் பிராமண தர்மத்தை நிலைநிறுத்தவே முயற்சிக்கின்றனர். கம்ப இராமாயணத்தில் பரசுராமன் வில் வளைக்கப்பட்டதின் பின்னணியில் பிராமணிய

ஆற்றல் தோற்கடிக்க கம்பர் அனுமதிக்கிறார். ஆனால் ஜெயமோகன் போர் செய்வதையே குற்றமாகக் கருதுகிறார். இது அவரின் சார்புநிலையைக் காட்டுகிறது.

- ஆணாதிக்கம் நிலத்தையும் பெண்ணையும் ஆள முனைந்தான் அதனை பரசுராமன் தொன்மம்வழி நியாயப்படுத்தியுள்ளார் படைப்பாளர்.
- பெண்ணுக்கான கற்புக் கோட்பாட்டை வரையறுக்கவும் பெண் கணவனுக்கானவள் என்பதைக் காட்டவும் அவளை விசாரணையின்றி தண்டிக்கவும் அவனுக்கு உரிமையை வழங்கவும் ஆண் மையச் சமூகம் தொன்மக்கதைகளைப் பயன்படுத்தியது. இதனால் தாய்வழிச் சமூகம் வீழ்ச்சியைச் சந்தித்து, பெண் இரண்டாம் நிலைக்குச் செல்ல வழிவகுத்தது.

அடிக்குறிப்புகள்

1. ஜெயமோகன், மழைப்பாடல், ப.17, 2015, கிழக்குப் பதிப்பகம், சென்னை.
2. ஜெயமோகன், வண்ணக்கடல், ப.422, 2015, கிழக்குப் பதிப்பகம், சென்னை.
3. கம்பர், இராமாயணம், பாடல் 1301.
4. ஜெயமோகன், வண்ணக்கடல், ப.422, 2015, கிழக்குப் பதிப்பகம், சென்னை.
5. மேலது, ப.420
6. ஜெயமோகன், மழைப்பாடல், ப.17, 2015, கிழக்குப் பதிப்பகம், சென்னை.
7. மேலது, ப.17.
8. மேலது, ப.39.
9. மேலது, ப.39
10. மேலது, ப.40.
11. மேலது, ப.41.
12. ஸ்டீபன், ஞா., தமிழ்ச் சமூகத்தில் வாய்மொழிக் கதைகள், ப.87, 2019, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், சென்னை.
13. ஜெயமோகன், வண்ணக்கடல், ப.335, 2015, கிழக்குப் பதிப்பகம், சென்னை.
14. ஜெயமோகன், முதற்கனல், ப.296, 2015, கிழக்குப் பதிப்பகம், சென்னை.
15. மேலது, ப.296.
16. ஸ்டீபன், ஞா., தமழ்ச் சமூகத்தில் வாய்மொழிக் கதைகள், ப.91, 2019, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், (பி) லிட், சென்னை.

********* ********* ********** ********* ********* ********** ********** **********